8

# திருக்குறள் காட்டும் மேலாண்மை

**வே.அந்தோணி ராஜா**

**உதவிப்பேராசிரியர்,மொழித்துறை**

**ஆர்.வி.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி- சூலூர்.**

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியம் என்பது மனித வாழ்வியல் இருந்து உருவானது. அதில் தனிமனித அனுபவம் சமூகத்தின் அனுபவம் இணையும் போது இலக்கியம் என்ற ஒரு வாழ்வாதம் கிடைக்கிறது வரலாற்றின் தான் தொடர்ச்சியைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிற தமிழ் சமூகத்தின் கலாச்சாரம், வாழ்வியல், அறித்திறனை அறிந்து கொள்ள முதன்மை இலக்கியமாக திருக்குறள் விளங்குகிறது. அந்தவகையில் திருக்குறள், தமிழின் மிகவும் பிரதானமான மற்றும் உலகளாவிய வகையில் பரவலாக பரவிய கலந்துரையாடல் மற்றும் கல்வி நூலாக விளங்குகிறது. இதில் கற்பித்தல், வாழ்க்கை மற்றும் அரசியல் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் மேலாண்மை தத்துவங்கள் பற்றிய பல முக்கிய கருத்துகள் உள்ளன. திருக்குறளின் பல்வேறு பகுதிகள், மேலாண்மையை நலமுடன், அறத்துடன், சிந்தனையுடன் நடத்த வழி வகுக்கின்றன. மேலாண்மை என்பது மனிதன் மற்றும் சமூகத்தின் நல்லிணக்கத்திற்கு, பொருளாதார முன்னேற்றத்திற்கு, நெறிகளுக்கு, சிந்தனைகளுக்கு வழிகாட்டும் ஒரு திறமை ஆகும். திருக்குறளில், மேலாண்மையை பொறுப்புடன், நீதி அடிப்படையில், மற்றும் புத்திசாலித்தனமான முறையில் செய்வதை முக்கியமாக எடுத்துக் காட்டுகிறது. இதன் மூலம் ஒரு நாட்டின் அல்லது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு நிரந்தரமான வழிமுறைகள் மற்றும் தீர்வுகள் உருவாகின்றன.

**திறவுச் சொற்கள்:** மனிதன், திருக்குறள், திறமை, முன்னேற்றம், நாடு, நீதி

**முன்னுரை:**

மனிதன் தான் வாழ்வினை அடுத்தடுத்த நிலைக்கு எடுத்துச் செல்ல சிந்திக்கும் திறனுடையவன். அத்தகைய சூழலில் தன் வாழ்வினை முன்னேற்ற பாதைக்கு எடுத்துச் செல்ல பல்வேறு திட்டமிடலில் தன்னை ஈடுபடுத்தி உறுபடுத்திக் கொள்கிறான். திட்டமிடுதலில் அவனின் பல்வேறு வகையான வளர்ச்சிக்கு நிலை அடைய வழிவகை செய்கின்றது. அந்த வகையில் உலகமெங்கும் பரவிக் கிடைக்கின்ற மக்களின் சிந்தனைகளை சீர்திருத்தி தருகின்ற இலக்கியங்கள் பல இருந்தும் அதில் முதன்மையான இடத்தை வகிப்பது உலகம் பொதுமறை என்று அழைக்கப்படும் திருக்குறள் உலகில் உள்ள மானுடத்தை உயர்த்தும் எண்ணத்தினை கொண்ட வள்ளுவரின் முகத்தான மேலாண்மை சிந்தனைகளை பற்றிய ஆராய்வதே இக்கட்டுரையில் நோக்கம்.

கேப்டன்.பென்னட்சிங் மேலாண்மை எல்லா இடங்களுக்கும் தேவை என்கின்றார். அவர் மேலாண்மையை நான்கு வகைகளாக பிரித்து விளக்குகிறார்.

1. தகவல்சேகரித்தல், 2. திட்டமிடுதல் ,

3. செயல்படுத்தல், 4. கண்காணித்தல்

மேலும், திரு. விக்ரம் அவர்கள் மேலாண்மையை பின்வருமாறு கூறுகிறார்.

1. திட்டமிடல்,2. ஒருங்கிணைத்தல் ,3.நியமித்தல்

4. கட்டுப்படுத்தல் , 5. இணைத்தல்

என்ற ஐந்து வகைகளில் விளக்கம் அளிக்கிறார்.

**திட்டமிடல்.**

ஒரு செயலைச் செய்யக்கூடிய வகைகளையெல்லாம் முற்றும் ஆராயாமல் அச்செயலைத் தொடங்குவது, பகைவரை மேலும் வலிமைப்படுத்த உதவும் வழியாகும்.(குறள் – 465).

வகையறச் சூழாது எழுதல் பகைவரைப்

பாத்திப் படுப்பதோர் ஆறு. (குறள் – 465)

எந்த ஒரு செயலையும் செய்யத் தொடங்குவதற்கு முன் நன்கு சிந்தனை செய்து அதனை தொடங்க வேண்டும் அவ்வாறு இல்லாமல் தொடங்கிய பின் அதனை பற்றி சிந்தனை செய்வது என்பது தவறு.(குறள் – 467)

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்

எண்ணுவம் என்பது இழுக்கு. (குறள் – 467)

**திட்டமிடுவது எப்படி?**

செயலைப் பற்றித் தெரிந்தவர்களோடு கலந்து ஆலோசித்தல் செய்ய விரும்பும் செயலைப் பற்றி நன்கு தெரிந்த குழுவினரோடு கலந்து ஆராய்ந்து, தாமும் சிந்த்திதுப் பார்த்துச் செயல்படுவோர்க்கு, செய்வதற்கு அரிய செயல் எதுவும் இல்லை (குறள் – 462).

தெரிந்த இனத்தொடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு

அரும்பொருள் யாதொன்றும் இல். (குறள் – 462)

எந்தச் செயலையும் திறமையாகச் செய்வதற்கு அறிவும், அனுபவமும், ஆற்றலும் தேவை. தேவையான அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகிய அனைத்தும் ஒருவரிடத்தில் இருப்பதற்கு வாய்ப்பில்லை. அதனால், ஒரு செயலைத் தொடங்குமுன் தேவையான துறைகளில் அறிவு, அனுபவம், பயிற்சி, தேர்ச்சி ஆகியவற்றில் சிறந்தவர்களோடு கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுவது மிகச் சிறந்த கருத்து. இக்கருத்து வள்ளுவர் காலத்தைவிட இக்காலத்துக்கு மிகவும் ஏற்புடையது.

**கட்டமைத்தல்**

செயல்களை வரிசைப்படுத்துவதைப் பற்றி வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார். செய்ய வேண்டிய செயல்களை செய்யாவிட்டாலும், செய்யக்கூடாத செயல்களைச் செய்தாலும் குறிக்கோளை அடைய முடியாது என்கிறார் வள்ளுவர் (குறள் – 466).

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க

செய்யாமை யானும் கெடும். (குறள் – 466)

காலம் தாழ்த்திச் செய்ய வேண்டிய செயல்களைக் காலம் தாழ்த்தியும், காலம் தாழ்த்தாமல் செய்ய வேண்டிய செயல்களைக் காலம் தாழ்த்தாமலும் செய்ய வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார் (குறள் - 672).

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க

தூங்காது செய்யும் வினை. (குறள் – 672)

**இயக்குதல்**

ஆராயாமல் எவரையும் தேர்ந்தெடுக்கக் கூடாது. நன்கு ஆராய்ந்து தேர்ந்தெடுத்த பிறகு, அவரிடம் ஒப்படைக்கக்கூடிய பணிகளைத் தெளிவாக ஒப்படைத்துவிட வேண்டும் (குறள் – 509).

தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்

தேறுக தேறும் பொருள். (குறள் – 509)

ஒருவன் ஒரு செயலைச் செய்வதற்குத் தகுந்தவன் என்பதை நன்கு ஆராய்ந்த பிறகு, அவனை அச்செயலுக்கு உரியவனாக்கிவிட வேண்டும் (குறள் – 518).

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை

அதற்குரியன் ஆகச் செயல். (குறள் – 518)

**தலைமைத்துவம் செய்தல்.**

நெடுங்காலமாக நிலைத்திருக்கும் வீரர் பலரை உடையதே ஆனாலும், தலைமைதாங்கும் தலைவர் இல்லாத போது படைக்குப் பெருமை இல்லையாகும்.

நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை

தலைமக்கள் இல்வழி இல். (குறள் 770)

**கட்டுப்படுத்தல்.**

நாள் தோறும் தன் ஆட்சியில் நன்மை தீமைகளை ஆராய்ந்து முறைசெய்யாத அரசன், நாள் தோறும் (மெல்ல மெல்லத்) தன் நாட்டை இழந்து வருவான்.

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்

நாடொறும் நாடு கெடும். (குறள் 553)

**ஒழுங்கமைத்தல்.**

வேண்டிய பொருள், ஏற்றக்கருவி, தக்க காலம், மேற்கொண்ட தொழில், உரிய இடம் ஆகிய ஐந்தினையும் மயக்கம் தீர எண்ணிச் செய்ய வேண்டும்.

பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்

இருள்தீர எண்ணிச் செயல். குறள் 675

**முடிவுரை**:

திருக்குறள் காட்டும் மேலாண்மைக் கருத்துகள் சாதாரண வாழ்க்கையின் பங்குகள்

மட்டுமல்ல, அது மேலாண்மையில் பின்பற்றவேண்டிய அடிப்படை கோட்பாடுகளாக உள்ளது. இந்த நூலை முன்னெடுத்து, நேர்மை, அறிவு மற்றும் ஒழுக்கம் ஆகியவை மக்களின் முன்னேற்றக்கிற்கு முக்கியத்துவம் அளிக்கும் என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

**பார்வை நூல்கள்**


1.திருக்குறள் – பரிமேலழகர் உரை
பாரதி பதிப்பகம்
108, உஸ்மான் சாலை
தியாகராய நகர்
சென்னை – 600 007

2.வாழும் வள்ளுவர் – டாக்டர் வா.சே குழந்தை சாமி
பாரதி பதிப்பகம்
108, உஸ்மான் சாலை
தியாகராய நகர்
சென்னை – 600 007

3.சந்திரசேகரன்.இரா, (ப.ஆ) சங்க இலக்கியங்களில் நேரம் மற்றும் மனஅழுத்த மேலாண்மைக் கோட்பாடுகள், இளங்கோபதிப்பகம், கோவை.—22.